

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.6.2023) சென்னையில் நடைபெற்ற நல்லி குப்புசாமி செட்டியார் அவர்களின் பேரன் பி.ஆர். நித்தின் குமார், ஆர். ஸ்நிதா சரண் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.06.2023) தலைமைச் செயலகத்தில், சிறந்த சமூக சேவகரான "பாலம் பா.கலியாணசுந்தரம்" அவர்களின் சமூக சேவையை பாராட்டி, அவர்களைக் கௌரவிக்கும் வகையில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சென்னை, திருமங்கலம் என்.வி.என். நகர் திட்டப் பகுதியில் குடியிருப்பு ஒன்றினை ஒதுக்கீடு செய்து, அதற்கான ஆணையினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், ஆகியோர் உள்ளனர்.

## ரூ.19 கோடி மதிப்பீட்டில்

# காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயில் திருப்பணிகள்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூன் 29-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (28.06.2023) காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதர் திருக்கோயிலை தொன்மை மாறாமல் புதுப்பிக்கும் வகையில் ரூ.19 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள இராஜகோபுரம், ஆயிரங்கால் மண்டபம், ரிஷிகோபுர மண்டபம், மாவடி சன்னதி, நடராஜர் சன்னதி, சிவகங்கை தீர்த்தக் குளம், திருமதில் பலப்படுத்தும் பணிகள் உள்ளிட்ட 29 திருப்பணிகளை தொடங்கி வைத்தார்.

இதில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

1,000 ஆண்டுகளுக்கு மேலான நம் முன்னோர்களால் உருவாக்கப்பட்ட திருக்கோயில்களை பொக்கிஷங்களாக பாதுகாத்திடும் வகையில் புனரமைத்தல், ஆகம விதிப்படி 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருப்பணிகளை மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், திருக்குளங்களை பாதுகாத்தல், திருத்தேர்களை புனரமைத்தல், நந்தவனங்களை பாதுகாத்தல், திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுகின்ற வகையில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, தங்கும் அறை, முடி காணிக்கை மண்டபம், விருந்து மண்டபம் போன்றவற்றை ஏற்படுத்துதல் போன்ற பணிகளை இந்து சமய அறநிலையத்துறை மேற்கொண்டு வருகிறது.

**பாலாலயம்!**

1,000 ஆண்டுகள் தொன்மையான திருக்கோயில்களை புனரமைத்து பாதுகாத்திடும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத்துறையின் வரலாற்றில் இல்லாத அளவிற்கு அத்திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு 2022 -2023 ஆம் ஆண்டில் ரூ.100 கோடியும், 2023 - 2024 ஆம் ஆண்டிற்கு ரூ.100 கோடி அரசு மானியமாக வழங்கி இருக்கின்றார். அந்த வகையில் 1,000 ஆண்டுகள் பழமையான ஏகாம்பரநாதர் திருக்கோயிலில் அரசு மானியம் ரூ.17 கோடி மற்றும் திருக்கோயில் நிதி ரூ.2 கோடி ஆகமொத்தம் ரூ.19 கோடியில் திருப்பணிகள் மேற்கொள்ள இன்றைய தினம் பாலாலயம் நடைபெற்றது.

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் 1,000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களாக 714 திருக்கோயில்கள் கண்டறியப்பட்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை புனரமைக்க 2022- 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அரசு மானியம் ரூ.100 கோடியில் தொன்மையான 47 திருக்கோயில்களின் திருப்பணிகளும், 66 திருக்கோயில்களில் உபயதாரர் நிதியிலிருந்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இந்தாண்டு வழங்கப்பட்ட அரசு மானியம் ரூ.100 கோடியில் 45 திருக்கோயிலின் திருப்பணிகளும், உபயதாரர் நிதியின் மூலம் 39 திருக்கோயிலின் திருப்பணிகளும் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு திட்டத்தின்படி வருகின்ற 5 ஆண்டுகளில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட 500 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு புனரமைக்க திட்டமிடப்பட்டிருக்கின்றது.

10 ஆண்டுகளுக்கு பிறகு 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட 714 திருக்கோயில்களும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் ஆட்சி காலத்தில் தான் பாதுகாக்கப்பட்டது என்று வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும்.

இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் காஞ்சிபுரம் மண்டலத்தில் 2022- 2023 ஆம் ஆண்டில் 70 திருக்கோயில்களில் ரூ.42 கோடி மதிப்பீட்டில் 123 பணிகளும், 2023 -2024 ஆம் ஆண்டில் 56 திருக்கோயில்களில் ரூ.10.5 கோடி மதிப்பீட்டில் 134 பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த அரசு பொறுப்பேற்ற பின் இந்து சமய அறநிலைத்துறை வரலாற்றில் இல்லாத அளவிற்கு 788 திருக்கோயில்களில் திருக்குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கும் பணிகளில் இதுவரை ரூ.4,740 கோடி மதிப்பீட்டிலான 5,001 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. இந்து சமய அறநிலையத்துறையில் வெகு சிறப்பாக திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதற்கு அனைத்து வகையிலும் ஊக்கம் அளித்து, திராவிட மாடல் ஆட்சி நடத்திவரும் முதலமைச்சர் தளபதி அவர்கள் தான் காரணம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சிதம்பரம் நடராஜர் கோயிலை பொறுத்தளவில் சட்டப்படி பக்தர்களின் சுதந்திரமான இறைவழிபாட்டிற்கு அனைத்து உதவிகளையும் இந்து சமய அறநிலைத்துறையும், தமிழ்நாடு அரசும் செய்யும். இதில் யார் பெரியவர் என்ற பிரச்சனையே இல்லை. இறையன்பர்கள் தெய்வத்தை வழிபடுவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்து தருவதுதான் எங்களுடைய நோக்கமாகும்.

**வாடகை பாக்கி!**

காஞ்சிபுரம், ஏகாம்பரநாதர் திருக்கோயில் திருப்பணிகள் 2024 ஆம் ஆண்டு இறுதிக்குள் பணிகள் நிறைவு பெற வேண்டும் என்று துறை அலுவலர்களை கேட்டுக் கொண்டிருக்கின்றோம். கடைசியாக இத்திருக்கோயிலுக்கு 2006 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்று இருக்கின்றது. சுமார் 17 ஆண்டுகள் கடந்துவிட்டதால் திருப்பணிகளை வேகப்படுத்தி குடமுழுக்கு நடத்தப்படும்.

பக்தர்கள் தாங்கள் விரும்பும் திருக்கோயில்களுக்கு ஆன்லைன் மூலமாகவே நன்கொடை அளிப்பதற்கு வசதிகளை ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது. மேலும், திருக்கோயில் அலுவலகங்களிலும் நன்கொடைகள் வழங்கி அதற்குண்டான ரசீதுகளை பெற்றுக் கொள்ளலாம். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு இதுவரை ரூ.275 கோடி நிலுவையில் இருந்த வாடகை பாக்கி வசூலிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பாராமுகமாய் இருந்த கலை மற்றும் பண்பாட்டு சின்னங்களாய் திகழும் தொன்மை வாய்ந்த திருக்கோயில்களை பாதுகாத்திடும் வகையில் அத்திருக்கோயில்களை களஆய்வு செய்திட முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அந்த வகையில் காஞ்சிபுரம், ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுடன் வருகை தந்து ஆய்வு செய்ததன் விளைவாக தான் ரூ.19 கோடி மதிப்பீட்டிலான பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, இன்றைக்கு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த ஆட்சியில் இத்திருக்கோயிலில் வீற்றிருக்கும் ஏகாம்பரநாதர் பொலிவோடு மகிழ்ச்சியோடு இருப்பார் என்பதை நானும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு சொந்தமான ரூ.250 கோடி மதிப்பிலான சொத்துக்களை ஆக்கிரமித்திருந்த 6 நபர்கள் மீது முறையாக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, சொத்துக்களை மீட்டிருக்கின்றோம். இந்த ஆட்சி பொறுப்பேற்றபின் முதன்முதலில் நில மீட்பு நடவடிக்கை இங்கு தான் தொடங்கியது. இறைவன் சொத்து இறைவனுக்கே என்று திருக்கோயில் சொத்துக்களை மீட்டு வருவது திராவிட மாடல் ஆட்சியின் பாராட்டுக்குரிய பணிகளில் ஒன்றாகும்.

மேலும், இந்த அரசு பொறுப்பேற்றபின் 80 ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த திருவண்ணாமலை, தென்முடியனூர், முத்துமாரியம்மன் திருக்கோயில், 12 ஆண்டுகளுக்கு மேலாக மூடப்பட்டிருந்த மதுரை கள்ளிக்குடி வாலகுருநாத சுவாமி திருக்கோயில், சேலம் மாவட்டம், திருமலைகிரி மற்றும் வடகுமரை மாரியம்மன் திருக்கோயில்கள், கரூர், வீரணம்பட்டி, அய்யனார் திருக்கோயில், விராலி மலை, முத்துமாரியம்மன் திருக்கோயில் உள்ளிட்ட 9 திருக்கோயில்கள் பக்தர்கள் தரிசனத்துக்கு திறக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக பல்வேறு பிரச்சனைகள் காரணமாக மூடப்பட்டுள்ள 40 திருக்கோயில்களில் 10 திருக்கோயில்கள் இந்து சமய அறநிலைத்துறைக்கு கட்டுபாட்டிலுள்ளவை. இதர 30 திருக்கோயில்கள் தனியார் திருக்கோயில்களாகும். மூடப்பட்டிருக்கும் அனைத்து திருக்கோயில்களையும் வருவாய்த்துறை மற்றும் காவல்துறை உதவியோடு அமைதி பேச்சு வார்த்தை நடத்தி திருக்கோயில்களை திறந்து பக்தர்கள் வழிபாடு செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கடந்த வாரம் நடைபெற்ற கூட்டத்தில் இணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இப்படி பல ஆண்டுகளாக தீர்க்கப்படாத பிரச்சனை களுக்கும் முடிவை ஏற்படுத்துகின்ற வகையில் இந்த ஆட்சி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் க. சுந்தர், சி.வி.எம்.பி.எழிலரசன், கூடுதல் ஆணையர் திருமதி சி. ஹரிப்ரியா, மாநகராட்சி மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், காஞ்சிபுரம் மண்டல இணை ஆணையர் திருமதி இரா. வான்மதி, அறங்காவலர் குழு தலைவர் எம்.வி.எம். வேல்மோகன், உதவி ஆணையர் பொ. இலஷ்மி காந்த பாரதிதாசன், அறங்காவலர் குழு உறுப்பினர்கள் சு.வரதன், வ.ஜெகன்நாதன், சு.விஜயகுமார், திருமதி சு.வசந்தி சுகுமாறன், திருக்கோயில் செயல் அலுவலர் திருமதி ப.முத்துலட்சுமி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (28.06.2023) காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம், ஏகாம்பரநாதர் திருக்கோயிலை தொன்மை மாறாமல் புதுப்பிக்கும் வகையில் ரூ.19 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள இராஜகோபுரம் உள்ளிட்ட திருப்பணிகளை தொடங்கி வைத்தார். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர், சி.வி.எம்.பி.எழிலரசன், கூடுதல் ஆணையர் திருமதி சி. ஹரிப்ரியா, காஞ்சிபுரம் மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், காஞ்சிபுரம் மண்டல இணை ஆணையர் திருமதி இரா.வான்மதி, அறங்காவலர் குழு தலைவர் எம்.எம்.வேல்மோகன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பிரதமர் மோடியிடம் கேள்வி கேட்ட

# அமெரிக்க பெண் நிருபருக்கு வலைதளத்தில் அச்சுறுத்தல்!

## வெள்ளை மாளிகை கண்டனம்!

வாஷிங்டன்,ஜூன்.29-

அமெரிக்காவில் பிரதமர் மோடியிடம் சிறுபான்மையினர் உரிமை குறித்து கேள்வி கேட்ட பெண் நிருபர் ஆன்லைனில் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டதை ஏற்க முடியாது என வெள்ளை மாளிகை கண்டனம் தெரிவித்துள்ளது. பிரதமர் மோடியின் சமீபத்திய அமெரிக்க பயணத்தில் முதல் முறையாக செய்தியாளர்கள் கேள்விக்கு பதிலளித்தார். அப்போது தி வால் ஸ்ட்ரீட் ஜர்னல் பத்திரிகையின் பெண் நிருபர் சப்ரினா சித்திக், இந்தியாவில் சிறுபான்மையினரின் உரிமைகள் குறித்தும் அவற்றை மேம்படுத்துவதற்கும், பேச்சுரிமையை நிலைநாட்டுவதற்கும் பாஜ அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது என கேள்வி எழுப்பினார்.

அதற்கு பிரதமர் மோடி, இந்தியா ஜனநாயக நாடு என்றும், அரசியலமைப்பின் அடிப்படை கொள்கைகளில் நாடு இயங்குகிறது என்றும் பதிலளித்தார்.

இதைத் தொடர்ந்து, நிருபர் சப்ரினா சித்திக் சமூக வலைதளங்களில் பல்வேறு விமர்சனங்களை எதிர்கொண்டார். அவர் 'பாகிஸ்தானி இஸ்லாமியவாதி' என்றும், தூண்டிவிடும் உள்நோக்கத்துடன் கேள்வி கேட்டதாகவும் பலரும் கடுமையாக தாக்கி சமூக வலைதளங்களில் பதிவுகள் வெளியிட்டனர்.


இந்த விவகாரம் குறித்து வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் ஒருங்கிணைப்பாளர் ஜான் கிர்பி அளித்த பேட்டியில், "அந்த அச்சுறுத்தல் பற்றிய தகவல்களை நாங்கள் அறிவோம்.

இது ஏற்றுக்கொள்ள முடியாதது. எந்தச் சூழ்நிலையிலும் எந்த இடத்திலும் பத்திரிகையாளர்கள் அச்சுறுத்தப்படுவதை நாங்கள் முற்றிலும் கண்டிக்கிறோம்" என்றார்.

# குமரிக் கடலில் பலத்த காற்று!

சென்னை, ஜூன் 29 -

குமரிக்கடல், மன்னார் வளைகுடா, தென் தமிழ்நாடு, இலங்கை கடலோரப் பகுதி, இலட்சத் தீவு, மாலத்தீவு, கேரளகர்நாடக கடலோரப் பகுதிகளில் சூறைக் காற்று வீசும் என்பதால் மீனவர்கள் கடலுக்குள் செல்லவேண்டாம் என சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. தென்மேற்கு, தென்கிழக்கு வங்கக் கடல் பகுதிகளில் மணிக்கு 55 கி.மீ வேகத்தில் சூறைக்காற்று வீசும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



**கா**ந்தியடிகள் போல்
கடைசி வரையில்
கடமைகளைச்
செய்வோம்!
அண்ணா போல்
எதையும் தாங்கும்
இதயம் பெறுவோம்!
பெரியார் போல்
எதிர்ப்புக்கிடையேயும்
ஏற்ற கொள்கைகளைத்
தமிழ்க் கழனியில்
பயிரிடுவோம்!

**தமிழினத் தலைவர் கலைஞர்....**

### தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

# மாவட்ட ஒருங்கிணைப்பாளர் - துணை ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் துணை ஒருங்கிணைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சென்னை கிழக்கு மாவட்டம்**

**மாவட்ட ஒருங்கிணைப்பாளர் - க. பா. பிரதீப்குமார்**
86/95, சண்முகராயன் தெரு, ஏழுகிணறு,
சென்னை 600001

**மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள்**
அருண் மனோகரன் (கொளத்தூர்) (களப்பணி)
36/416, நேதாஜி தெரு ஜி கே எம் காலனி,
சென்னை82

ச.சிவகுமார் (திரு.வி.க.நகர்)
16,ராமச்சந்திரன் தெரு,பெரம்பூர்,
சென்னை - 600011

அ.ஆதில் அகமது (துறைமுகம்)
19/10, அப்பு மேஸ்திரி தெரு,மண்ணடி,
சென்னை - 600001

உ.பிரசன்ன வேலன் (வில்லிவாக்கம்)
101/41,நாகேஸ்வர குருசாமி தெரு,
அயனாவரம்,சென்னை

ச.கோவிந்த் (அம்பத்தூர்)
37,20வது அவென்யூ,பானுநகர்,புதூர்,
சென்னை - 600053

ம.வெற்றிவேலன் (எழும்பூர்)
எண் 75, சிபிளாக்.எம்.எஸ்.நகர்,
சேத்பட், சென்னை 600031

" """ (சமூக வலைதளம்) செ.உதயசீலன்
புது எண்.40,பழைய எண் 125, புது பாரான்ஸ் சாலை,பட்டாளம், சென்னை - 600012

" " " (மகளிர்) திருமதி. ஆ.பெரியார் பிரியா
200, 12வது 4வது குறுக்கு தெரு,
பெரியார் நகர்,கொளத்தூர்,சென்னை600082

**தென்காசி தெற்கு மாவட்டம்**

மாவட்ட ஒருங்கிணைப்பாளர் -
**நாகராஜ சங்கர் (எ) சரவணார்,** 172, என்ஜிஓபி காலனி,
மின் நகர், மேலநகரம் - 627 802.

**மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்**
அழகு தமிழ், (களப்பணி)
5/266, 2, கே.ஆர்.காலனி, தென்காசி 627811.
பி. ஸ்ரீதர், 9, பராசக்தி நகர், குற்றாலம் - 627 802.
சிங்கத் துரை ,வெள்ளிக்குளம், பொட்டல்புதூர் வழி,
தென்காசி வட்டம்.

**********************************************

" " " (சமூக வலைதளம்) ச. கார்த்திக்,
17934, அம்மன் சன்னதி தெரு,
சிவகுருநாதபுரம், சுரண்டை - 627 859.

" " " (மகளிர்) கே.எஸ்.எஸ்.சேகனா,
119, பரசுராமபுரம் தெரு, கடையநல்லூர்.

**கன்னியாகுமரி மேற்கு மாவட்டம்**

**மாவட்ட ஒருங்கிணைப்பாளர் :** ஆர்.சிவபாலன்,
1415பி, நிஷா பவன், வாழவிலை, ஞாரான்விளை, பாகோடு,
கன்னியாகுமரி629 168.

**மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள்**
பி.எஸ்.அபிலாஷ் (கிள்ளியூர்) (களப்பணி)
18/146, அணஞ்சி பார்வதி வீடு,
இராவர்மன் புதுத்தெரு, காஞ்சாம்புறம்,
கன்னியாகுமரி - 629168.

ஏ. ஜோஸ்,(விளவங்கோடு)
37147டி, ஜே.ஜே.சாலை, வருத்தக்குட்டியல்விளை,
பாகோடு, கன்னியாகுமரி - 629 168.

ஏ. அருள்செல்வன், (பத்மநாபபுரம்)
346, குன்றுவிளை, முளவிளை, வியன்னூர் அஞ்சல்,
கன்னியாகுமரி - 629 177.

" " " (சமூக வலைதளம்) எம்எஸ். சாமுவேல்ராஜ்,
29/49/1எப், ஜேக்கப் காம்பவுண்ட், ஜார்ஜ் வில்லா, தக்கலை,
கன்னியாகுமரி - 629 160.

" " " (மகளிர்) திருமதி ஆஸ்பின் சிஎஸ் கிருபா,
15 39இ2, பருத்தியடைப்புவிளை, ஆன்றனி நகர், இலவுவிளை
அஞ்சல், கன்னியாகுமரி 629 171.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை -18.
நாள்- 28.06.2023

**டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்
தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி